

Holland Bloorview
Kids Rehabilitation Hospital

# Family Leadership Program
## (குடும்ப தலைமை பதவித் திட்டம்)

மீளாய்வு செய்த ஆண்டு 2017 - 2018

நம்முடைய Family Leadership Program (குடும்ப தலைமை பதவித் திட்டம்) உண்மையிலேயே எந்த அளவுக்குத் தனிச்சிறப்புள்ளதாகவும் அமைப்பினால் வழிநடத்தப்படுவதாகவும் இருக்கிறது என்பதை நான் சுயமாக உணர்ந்திருக்கிறேன். Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) அணியின் ஒவ்வொரு உறுப்பினர் ஒவ்வொருவரிடம் காணப்படும் ஈடுபாடும் உண்மையான கூட்டுப் பொறுப்பும் பெரும்பாலான அமைப்புகளில் காணப்படுவதில்லை. நாம் இணைந்து உருவாக்கியுள்ள இத் திட்டத்துக்காக Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) மிகுந்த பெருமிதம் கொள்ளவேண்டும். நம்மைச் சார்ந்துள்ள குழந்தைகளிடமும் இளைஞர்களிடமும் ஒரு நம்பமுடியாத தாக்கத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் கூட்டுப் பொறுப்பு ஏற்படுத்தியுள்ளதுடன் நம் இறுதி குறிக்கோளை அடைவதற்கும் துணை நிற்கிறது: அனைத்துக் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மிகவும் அர்த்தமுள்ள மற்றும் ஆரோக்கியமான எதிர்காலம்."

Adrienne Zarem, family leader (அட்ரின்னா ஸாரெம், குடும்பத் தலைவர்)

# நன்கொடை வழங்கி உதவிய உங்களுக்கு நன்றி

Family Leadership Program (குடும்ப தலைமை பதவித் திட்டம்) க்கு மிகுந்த ஈடுபாட்டுடன் நன்கொடை வழங்கி ஆதரவு காட்டியிருக்கும் நன்கொடையாளர்கள் அனைவருக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய தாராள குணம் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் அர்த்தமுள்ள விதமாகக் கூட்டு சேர்ந்து Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) மருத்துவமனை கவனிப்புத் திட்டங்களை உருவாக்கி வழங்குவதை மருத்துவமனையிலும் அதற்கு அப்பாலும் பரவ உதவுவதற்கு அவர்களுடைய தாராள மனப்பான்மை பெருதவியாக இருக்கிறது.

# பொருளடக்க அட்டவணை


தலைவர் மற்றும் CEO வின் கடிதம 5

குடும்ப தலைமை பதவித் திட்டம்:
நாங்கள் யார் 6

ஈடுபாட்டின் மீது தனிக்கவனம் 9

குழந்தைகளுக்கான ஆலோசனை மன்றம் 12

இளைஞர்களுக்கான ஆலோசனை மன்றம 14

குடும்ப ஆலோசனைக் குழு 16

Bloorview Research Institute Family Engagement
(ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவன குடும்ப ஈடுபாட்டுக்) குழு 18




“நாங்கள் மேற்கொண்டிருக்கும் அனைத்து பணிகள் நான் உருவாக்கியிருக்கும் இலக்கமுறை தளங்கள் எளிதாகப் பயன்படுத்தக்கூடியதாகவும், நம் வாடிக்கையாளர்களும் குடும்பங்களும் அணுகக்கூடியதாகவும் இருக்கச் செய்யும் குறிக்கோளை மையமாகக் கொண்டுள்ளது - நம் இளைஞர்கள் மற்றும் குடும்பத் தலைவர்களின் முன்னோக்கு மற்றும் கூட்டுமுயற்சி இல்லாமல் இதைச் சாதித்திருக்க முடியாது. மிகச் சிறந்த ஒன்றிற்காக பாடுபட்டிருக்கும் உங்களுக்கு உளமார்ந்த நன்றி கூறுகிறோம் - அபூர்வ பங்குதாரர்களாக எங்களுடன் இருந்திருக்கிறீர்கள், இனியும் தொடர்ந்து இருப்பீர்கள்.”

Nadia Van, senior digital associate (நாடியா வான், சீனியர் டிஜிட்டல் அசோஸியேட்)

“அர்ப்பணித்துக் கொண்ட குடும்பம், இளைஞர் மற்றும் குழந்தைத் தலைவர் தன்னார்வலர்களுடன் பணிபுரிந்த அனுபவம் என்னைப் பொறுத்தவரையில் ஒரு கேம் சேஞ்சர்! அர்த்தமுள்ள கூட்டாண்மைகள் மூலம் திட்டங்களையும் தர மேம்பாட்டு முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு ஓர் உயர்ந்த நிலைக்கு முன்னேறியிருக்கிறோம், அவைகளை நாங்கள் மேற்கொண்டிருக்காவிட்டால், இந்த உயரத்தை எட்டியிருக்க முடியாது, அதற்காக அமைப்பு முழுவதிலும் நாங்கள் அங்கீகாரம் பெற்றிருக்கிறோம். தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறனில் கூட்டாண்மையைத் தொடர்ந்து வளரச்செய்வதில் நான் ஆர்வமாக இருக்கிறேன்.”

Laura Oxenham-Murphy, interim director of quality, safety and performance (லாரா ஆக்ஸென்ஹாம்-மர்ஃபி, தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் இடைக்கால இயக்குநர்)

“நம்முடைய வெளிநோயாளியின் ஒருங்கிணைப்பு குறித்து பல துறைகளுக்கு இடையிலும் நம்முடைய குடும்பத் தலைவர்களுக்கு இடையிலும் நிலவும் கூட்டிணைப்பால் நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன். குடும்பத் தலைவர்களும் நானும் மாற்றத்தைப் பார்க்கத் தொடங்கியிருக்கிறோம், இங்கு புதிய குடும்பங்கள் தங்களுடைய முதலாவது சந்திப்பைக் கையாளுவதற்கான சிறப்பான தகுதியைப் பெற்றிருப்பதாக உணர்கிறார்கள், புரிதல் அல்லது நிவாரணத்துக்கான தருணங்களைப் பெற்றிருக்கிறார்கள், மற்றும் அவர்களுடைய புதிய தொடர்புகளிலிருந்து உதவி கேட்பதை சௌகரியமாக உணர்கிறார்கள்.”

Melissa Ngo, family support specialist (மெலிஸா ங்கோ, குடும்ப ஆதரவு வல்லுநர்)



# தலைவர் மற்றும் CEO -வின் கடிதம்

குழந்தை, இளைஞர் மற்றும் குடும்பத் தலைவர்களின் இத்தகைய அர்ப்பணிப்பு மிக்க குழுவுடன் கூட்டுச் சேர்வதற்கு Holland Bloorview Kids Rehabilitation Hospital (ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை) யில் உள்ள நாங்கள் எந்த அளவுக்குப் பாக்கியசாலிகளாக இருக்கிறோம் என்பதை நான் ஒவ்வொரு நாளும் நினைத்துப் பார்க்கிறேன். உங்களுடைய கடின உழைப்பு அர்ப்பணிப்பின் காரணமாக கவனிப்பு, சேவைகள், ஆராய்ச்சி மற்றும் பலவற்றின் மையத்தில் குடும்ப உறவுகளை வைத்து நாம் அனைவரும் இணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் உருவாக்க முடிவது மனதுக்கு நிம்மதி அளிக்கிறது.

அறிவையும் உள்நோக்குகளையும் பகிர்ந்துகொள்வதில் உங்களுக்கு இருக்கும் விருப்பம் உடல்நலப் பராமரிப்பு, கல்வி மற்றும் உங்களுடைய சமுதாயங்கள் ஆகியவற்றில் நம்முடைய எல்லைகளுக்கு அப்பாற்பட்டு இணைந்து செயல்படுவதற்கு உதவியுள்ளது. உங்களுடைய முயற்சிகள் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வில் பெரிதும் பாராட்டப்படுகின்றன, சுகாதார அமைப்புகள் முழுவதும் அவை உயர்வாக மதிக்கப்படுகின்றன.

Accreditation Canada (அக்ரடிஷேன் கனடா) மூலம் நடத்தப்பட்ட தரம் மற்றும் பாதுகாப்பு மீளாய்வில் உங்கள் ஆதரவுடன் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) 100 சதவீதம் பெற்றுள்ளது. வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் பங்கேற்றிருக்கும் உண்மையான கூட்டாண்மை நமது மதிப்பீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும், Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) மருத்துவமனையில் உங்களுடைய செயல்திறமிக்க பங்கேற்பு, ஆலோசனைகள் மற்றும் தலைமை ஏற்றுக்கொண்ட பண்பு ஆகியவற்றை சிலாகித்து பதிவு செய்துள்ளனர். நோயாளியின் ஈடுபாட்டில் எங்களுடன் இணைந்து தலைமை இடத்தைப் பெற உதவியதற்கு நன்றி.

வாடிக்கையாளர்களும் குடும்பமும் ஒருங்கிணைந்த கவனிப்பு குழு ஒவ்வொரு சமயத்தில் வாடிக்கையாளர்கள், அவர்கள் குடும்பங்கள் மற்றும் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) சமூகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கும் ஒப்பற்ற ஆதரவை போற்றி அங்கீகாரம் அளிக்க விரும்புகிறேன். நாம் சேவை புரிந்து கொண்டிருக்கும் குழந்தைகள், இளையோர் மற்றும் குடும்பங்களின் எதிர்கால நலன்கள் அறங்காவலர் குழு உள்ளிட்ட அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் உட்பொதியச் செய்து வாடிக்கையாளர் மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய கவனிப்பை ஒவ்வொரு நடவடிக்கையிலும் நிறுவியதற்கு நாங்கள் நன்றி பாராட்டுகிறோம்.

இறுதியாக, குடும்ப தலைமை பதவித் திட்டம் மற்றும் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் வாடிக்கையாளர் & குடும்ப நலம் மையமாகக் கொண்ட கவனிப்பு வருடந்தோறும் செழித்து வளர்ந்து கொண்டிருப்பதற்கு, தாராள மனதுடன் நம் நன்கொடையாளர்கள் அளித்துவரும் ஆதரவு ஒரு முக்கிய காரணம் என்றால் மிகையாகாது - குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க உதவிய உங்களுக்கு மனமார்ந்த நன்றி.

உங்கள் ஒவ்வொருவருக்கும் இதே போல அடுத்த ஆண்டும் சிறப்பான ஆண்டாக அமைய வாழ்த்துக்கள்.

தங்கள் உண்மையுள்ள,

Julia Hanigsberg (ஜூலியா ஹானிக்ஸ்பெர்க்)
President and CEO (தலைவர் மற்றும் CEO)

# Family Leadership Program (குடும்ப தலைமை பதவித் திட்டம்)

## நாங்கள் யார்

Family Leadership Program (குடும்ப தலைமை பதவித் திட்டம்) என்ற ஒரு கட்டமைப்பில், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள் மருத்துவமனையுடன் ஒத்துழைத்து வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பத்தை மையப்படுத்தி கவனிப்பு வழங்கும் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்த கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்த Bloorview Research Institute (ப்ளூர்வியூ ரிசர்ச் இன்ஸ்டிடியூட்) அமைப்பிற்கு துணை புரிவதைக் குறிக்கும்.

தன்னார்வக் குடும்பத் தலைவர்கள்

**140 க்கு மேற்பட்ட**

புதிய திட்டங்கள், முயற்சிகள் மற்றும் குழுக்களில் பங்கேற்றுள்ளனர்

மருத்துவமனை ஆலோசகர்கள்

**73**

மருத்துவமனைத் திட்டங்கள் குறித்த அனுபவங்களையும் யோசனைகளையும் பகிர்ந்துகொண்டனர்

ஆராய்ச்சி ஆலோசகர்கள்

**49**

ஆராய்ச்சி பற்றிய அனுபவங்களையும் யோசனைகளையும் பகிர்ந்துகொண்டனர்

சமவயது வழிகாட்டிகள்

**426**

சமவயதினருக்கான ஆலோசனைகளை வழங்கினர்

**184***

உள்நோயாளிப் பெற்றோர்கள் சமவயது வழிகாட்டிகளால் இணைந்து நடத்தப்பட்ட உள்நோயாளி பெற்றோர் கருத்துரைகளில் கலந்துகொண்டனர்

*எண் ஒன்றுக்கு மேற்பட்ட முறை கலந்துகொண்ட பெற்றோர்களைக் குறிப்பிடுகிறது

இளயை உதவியாளர்கள் கவனிப்பு மற்றும் சவேகைளின் தரத்தை மமேம்பட்டுத்தும் நரோக்கத்துடன்
**138**
வாடிக்கயைாளர்கள் மற்றும் குடும்பங்களுடன் நரேர்காணல்களை நடத்தினர்

**17**
குடும்பம் மற்றும் இளயை தலைமுறை ஆலரோசகர்கள் அங்கீகாரத் திட்டமிடலில் முழுமயைாகப் பங்களித்து அக்டரோபர் 2018 இல் நடைபெற்ற தரக் கருத்தாய்வில் நாங்கள் 100 விழுக்காடு மதிப்பணெ் பறெ உதவினர்.

**127**
ஊழியர்களும் மாணவர்களும் குடும்பத்தை மயைமாக வைத்து அளிக்கப்படும் கவனிப்பு மாதிரி பயிற்சிகளைப் பற்றுறு பயனடைந்தனர்

ஆராய்ச்சி மீளாய்வாளர்கள் குடும்ப நலத்தை மயைப்படுத்தும்
**15**
ஆராய்ச்சி திட்டங்களை வகுத்துள்ளனர்

**57**
குடும்பங்கள் குடும்பத் தலைவர்கள் ஒருங்கிணைந்து நடத்திய வளெிநரோயாளி வரவற்பேு பயிற்சியில் கலந்துகொண்டன

தங்கள் குடும்பக் கதயைை பாடமாகக் கற்றுத்தந்த குடும்பங்கள்
**50**
முறை கல்வி நடவடிக்கைகள், உள்நிறுவனத்தில் / வளெியிடங்களில் காட்சியளிப்பு சயெ்தனர் அல்லது பொதுநல முயற்சிகளை மற்கொண்டனர்

ஆராய்ச்சி முயற்சிகளை குடும்பங்களுக்கு நன்கு புரியவைப்பதற்காக
**25**
ஆராய்ச்சித் தொடர்பாளர்கள் விளக்கக்காட்சிகளை இணைந்து வழங்கியும் வடிவமைத்தும் உதவி புரிந்தார்கள்

**143**
குடும்பங்கள் Pro Bono Ontario (புரோ பனோே ஒன்டாரியோ) மூலம் வழங்கப்பட்ட பணியிடத் திட்டத்தில் இலவச சட்ட உதவிகளைப் பற்றன

**55**
சுகாதாரக் கல்விக்காக மருத்துவமனை ஆவணங்கள் குடும்பத் தலைவர்களால் மீளாய்வு செய்யப்பட்டன

குழந்தைகள், இளையோர் மற்றும் குடும்பங்கள் மொத்தம்
**3,125**
மணிநேர தன்னார்வ சேவை புரிந்தனர்

**517**
பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களை குடும்பங்கள் வாடிக்கையாளர் மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய கவனிப்பு சேம்பியன்களாக அங்கீகரித்தன

2017 இல், பின்வரும் செயல்பாடுகளுக்கு இளைஞர் வழிகாட்டிகள் தேவை என
**64**
கோரிக்கைகள் வந்தன

- தற்போதைய வாடிக்கையாளர்களுடன் 1:1 வழிகாட்டல்
- தற்போதைய கிளையண்ட்கள் மற்றும் குடும்பங்களுடன் சிறு குழு வழிகாட்டல்
- பயிலரங்குகள், பேனல்கள் மற்றும் விளக்கக்காட்சிகளில் பங்கேற்றல்
- ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுதல்




BLOOM (ப்ளூம்) எனும் வலைப்பதிவு இயலாமையுள்ள குழந்தைகளின் பெற்றோர்களை மருத்துவர்களுடன் இணைக்கச் செயல்படும் ஆதரவுச் சமூகமாக உதவுகிறது.

BLOOM (ப்ளூம்) ஃபேஸ்புக்-இல்
**1,467**
ஆர்வலர்களைக் கொண்டுள்ளது

BLOOM (ப்ளூம்)
**146**
நாடுகளில் வாசகர்களைக் கொண்டுள்ளது

கடந்த ஆண்டு, பெற்றோர்கள் மற்றும் தாத்தா பாட்டிகள் அனுபவங்களைத் தொகுத்து
**36**
கதைகளை BLOOM (ப்ளூம்) பிரசுரித்தது

Holland Bloorview Facebook group (ஹாலந்து ப்ளூர்வியூ ஃபேஸ்புக் குழு) வில் பெற்றோர்கள் குரல் பகுதியில்
**612**
உறுப்பினர்கள் உள்ளனர்.

# சிறப்பு நடவடிக்கைகள்

Children's Advisory Council (குழந்தைகள் ஆலோசனை மன்றம்), Youth Advisory Council (இளைஞர் ஆலோசனை மன்றம்), Family Advisory Committee (குடும்ப ஆலோசனைக் குழு) அல்லது Bloorview Research Institute Family Engagement Committee (ப்ளூர்வியூ ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஃபமேலி எங்கேஜ்மென்ட் குழு) வில் ஈடுபட்டிருப்பதுடன் குழந்தை, இளைஞர் மற்றும் குடும்பத் தலைவர்கள் கூடுதலாக பல திட்டப் பணிகளிலும் முன்முயற்சிகளிலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த ஆண்டு குழந்தைகள், இளைஞர் மற்றும் குடும்பங்கள் பங்கேற்றிருக்கும் சில சுவாரஸ்யமான நிகழ்வுகளையும் முன்முயற்சிகளையும் பாருங்கள்.



1



2




3

1 2017 இல், Accreditation Canada (அக்ரெடிடேஷன் கனடா) நிறுவனத்தால் நடத்தப்பட்ட தர மதிப்பீட்டில் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) 100 சதவீதம் பெற்றுள்ளது. குடும்பத் தலைவர்கள் ஆறு அங்கீகரிக்கும் அணிகளிலும், Family Leader Accreditation Group (FLAG) (குடும்பத் தலைவர் அங்கீகரிக்கும் குழுவிலும்) பங்கேற்றனர். படத்திலிருப்பவர்கள் அக்டோபர் மாதத்தில் மருத்துவமனையின் அங்கீகாரம் மதிப்பீட்டு விழாவில் கலந்து கொண்டனர்: Cally Hunt, hospital board chair 2016-18; Sherri-Ann Stringer, FLAG member; Alifa Khan, vice-chair of FLAG; Lies Ferriman, FLAG member; Holly Yip, FLAG member; and Julia Hanigsberg, president and CEO (கால்லி ஹன்ட், மருத்துவமனையின் வாரியத் தலைவர் 2016-18; ஷெர்ரி-ஆன் ஸ்ட்ரிங்கர், FLAG உறுப்பினர்; அலிஃபா கான், FLAG துணைத் தலைவர்; லியஸ் ஃபெர்ரிமனே, FLAG உறுப்பினர்; ஹோலி இப், FLAG உறுப்பினர்; மற்றும் ஜூலியா ஹானிக்ஸ்பெர்க், தலைவர் மற்றும் CEO) *(இட வலமாக)*.




Adrienne Zarem and Alifa Khan, FLAG chair and vice-chair, are among the first patient surveyors with Accreditation Canada (அட்ரியன்னி ஸாரெம் மற்றும் அலிஃபா கான், FLAG தலைவர் மற்றும் துணைத்தலைவர், அக்ரெடின் கனடா நிறுவனத்தில் முதல் நோயாளி மதிப்பீட்டாளர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்).

2 Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) மருத்துவமனையைப் பார்வையிட அரசாங்க அதிகாரிகள் வரும்போது அப் பயணங்களில் பெரும்பாலும் குடும்பம் மற்றும் இளைஞர் தலைவர்கள் பங்கேற்கின்றனர். படத்தில் இடம்பெற்றுள்ள Sageth Ravendran (second from right), a youth leader and youth employment program participant, taking part in a discussion about the importance of early work experience with Holland Bloorview staff and Susan Picorello, Assistant Deputy Minister of Ontario Public Service Accessibility and Employment Strategy for People with Disabilities Division (சகேத் ரவீந்திரன் *(வலதுபக்கம் இருந்து இரண்டாவதாக இருப்பவர்)*, இளைஞர் தலைவர் மற்றும் இளைஞருக்கான வேலைவாய்ப்புத் திட்டப் பங்கேற்பாளர், ஹாலந்து ப்ளூர்வியூ ஊழியர்கள் மற்றும் சூசன் பிகோரெல்லோ, உதவி துணை அமைச்சர், ஒன்டாரியோ பொது சேவை அணுகல் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம் பிரிவு இவர்களுடன் ஆரம்ப பணி அனுபவத்தின் முக்கியத்துவம் பற்றிய ஒரு விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்).

3 குழந்தைகள், இளைஞர் மற்றும் குடும்பத் தலைவர்கள் பெரும்பாலும் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) விலும் அதற்கு அப்பாலும் நடக்கும் விவாத நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்கள். இங்கு, குடும்பத் தலைவர் Cheryl Peters (செரில் பீட்டர்ஸ்) மற்றும் CAC உறுப்பினர் Jillian Peters (ஜிலியன் பீட்டர்ஸ்) ஆகியோர் Bloorview Research Institute (ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவனம்) க்கு நிதி திரட்டும் ஒரு நிகழ்ச்சியில் தங்கள் கதையைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.




4




5




6

**4** இளைஞருக்கான கருத்துப் பகுதி என்ற முன்னோடித் திட்டம், வழிநடத்திச் செல்லும் துணை மருத்துவரும் இளைஞர் தலைவருமாகிய Mathias Castaldo (மதியாஸ் கேஸ்டால்டோ) -அவர்களால்*(படத்திலிருப்பவர்)* ஏப்ரல் 2018 இல் தொடங்கப்பட்டது. இத் திட்ட யோசனையை இளைஞர் தலைவர் Jadine Baldwin (ஜடைன் பால்ட்வின்) வெளிப்படுத்தினார். ஊனம் என்ற கறை இல்லாத உலகத்தை உருவாக்கும் முயற்சிகளில் மருத்துவமனை சம்பந்தப்பட்ட மேம்பாட்டு ஆலோசனைகள் மற்றும் பெற்றிருக்கும் பாராட்டுக்களை வெளிப்படுத்த இளைய வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்கள் உடன் பிறந்தவர்கள் வீடியோக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

**5** மருத்துவமனையின் **Dear Everybody (அன்பிற்குரிய அனைவருக்கும்)** உடற்குறை ஒழிப்புப் பிரச்சாரத்தில் கலந்துகொள்ளுமாறு அதன் தொடக்க கால வளர்ச்சியிலிருந்தே, குழந்தை, இளைஞர் மற்றும் குடும்பத் தலைவர்கள் வலியுறுத்தி வந்தனர். அதன் இரண்டாவது ஆண்டில், தங்களுடைய உடற்குறை பற்றிய கண்ணோட்டங்களை மறுசிந்தனை செய்யத் தூண்டும் வகையில் கனடா மக்களுக்கு இந்த இயக்கம் நினைவூட்டுகிறது. Dear Everybody (அன்பிற்குரிய அனைவருக்கும்) என்பது இயலாமைக்கு எதிரான மருத்துவமனையின் ஐந்து வருடப் போராட்டத்தின் ஒரு பகுதி ஆகும். Jadine Baldwin and Casey MacKay at the CF Toronto Eaton Centre installation (CF டொரன்டோ ஈடன் மையம் ஏற்படுத்தப்பட்டபோது, இளைஞர் பிரதிநிதிகளாக ஜடைன் பால்ட்வின் மற்றும் கேசே மக்கே) ஆகியோரைப் படத்தில் காணலாம்.

**6** குடும்பம், குழந்தை மற்றும் இளைஞர் தலைவர்கள் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக 2018 இல் **Capes for Kids (கேப்ஸ் ஃபார் கிட்ஸ்)** இயக்கத்தில் பங்கேற்றிருந்தனர். குடும்பத் தலைவர்கள் அறக்கட்டளைக் கூட்டாளர்களிடம் இருந்தும் வெளியிலிருந்தும் **Capes for Kids (கேப்ஸ் ஃபார் கிட்ஸ்)** இயக்கத்தை அறக்கட்டளையுடனும், மற்ற வெளி ஆதரவாளர்களுடனும் கூட்டு சேர்ந்து குடும்ப தலைவர்கள் இயக்கத்திற்கு வலுவூட்டினர், வெறும் இரண்டு வருடங்களில் இந்த இயக்கம் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) –க்காக $1 மில்லியனுக்கும் கூடுதலாக நிதி திரட்டியது.













7 & 8 Family Leadership Program (குடும்ப தலைமை பதவித் திட்டம்) அங்கீகரிக்கப்பட்டது:

- மருத்துவமனையின் எல்லா பிரிவுகளிலும் வாடிக்கையாளர் மற்றும் குடும்பத்தை மையப்படுத்தும் கவனிப்பு அளிக்கப்படுவதை Merck Patients First Award (மெர்க் பேஷென்ட்ஸ் ஃபர்ஸ்ட் விருது) 2018 -ம் ஆண்டில் கிடைத்துள்ளது. Aman Sium, director of client and family integrated care, and Heather Evans, family leader (அமன் சியூம், டைரக்டர் ஆஃப் கிளையன்ட் அண்ட் ஃபமிலி இன்டெக்ரேடெட் கரே, மற்றும் ஹீதர் ஈவன்ஸ், ஃபமிலி லீடர்) விருதை ஏற்றுக்கொள்ளும் படம்.

- குழந்தை, இளைஞர் மற்றும் குடும்பத் தலைவர்கள் இணைந்து உருவாக்கி வழங்கிய கல்வி, சுகாதார, குழந்தைகள் மற்றும் சமுதாயச் சேவைகளில் தலைவர்களுக்கான புதுமுறை பயிற்சிக்கு நோயாளி மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய கவனிப்பு கூட்டாண்மை விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட கௌரவம் கிடைத்தது. படத்தில் இருப்பவர்கள் செயல்திட்டத் தலைவர்கள்: Jean Hammond, Amir Karmali and Kathryn Parker (ஜீன் ஹாமண்ட், அமிர் கர்மாலி மற்றும் கதேத்ரின் பார்க்கர்) (*இடமிருந்து வலம்*).

9 & 10. குடும்பத் தலைவர்கள் அவர்களுடைய கணிசமான தன்னார்வப் பங்களிப்புக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இங்கே படத்தில் உள்ள Sharda Ali-Ramjattan (*image 9*) and Saima Azhar (*image 10,middle*), family leaders (குடும்பத் தலைவர்கள், சாரதா அலி-ராம்ஜட்டன் (*படம் 9*) மற்றும் சாய்மா அஸார் (*படம் 10, நடுவில் இருப்பவர்*)), அவர்களுடைய சிறப்பு வாய்ந்த தலைமைக்காகவும் அவர்களின் சமுதாயத்தில் உள்ள மற்றவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அவர்கள் புரிந்த தன்னார்வத் தொண்டுக்காகவும் அவர்களுடைய மாகாண பாராளுமன்றத்தில் உள்ளூர் உறுப்பினர்களிடமிருந்து சமுதாயங்களை உருவாக்குவதில் முன்னோடி பெண்கள் என்ற விருதைப் பெறுகின்றனர்.

# Children's Advisory Council (குழந்தைகள் ஆலோசனை மன்றம்)

## நாங்கள் யார்

வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்கள் உடன்பிறப்புகள், 3 முதல் 13 வயது, Children's Advisory Council (குழந்தைகள் ஆலோசனை மன்றம்) (CAC) உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மருத்துவமனை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை உருவாக்கும் விதமாக வடிவமைக்கும் விதமாக CAC உறுப்பினர்கள் தங்களுடைய புதுமையான சிந்தனைகள், அனுபவங்கள் மற்றும் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். CAC தங்கள் கருத்துகளையும் எண்ணங்களையும் ஆக்க முறையில் வெளிப்படுத்த வலிமை சார்ந்தும், விளையாட்டுகள் சார்ந்தும் மாதிரிகளைப் பயன்படுத்தி தெரிவித்தது.

2017-2018 -ல் 61 உறுப்பினர்களைக் கொண்டிருந்த CAC தொடர்ந்து அதன் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது.









## நாங்கள் எப்படி ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினோம்

- மருத்துவமனையின் Dear **Everybody (அன்பிற்குரிய அனைவருக்கும்)** என்ற இயலாமை-களங்கத்தை அகற்றும் இயக்கத்தை உலகம் முழுவதிலுமுள்ள ஊனமுள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களையும் அரவணைத்துச் செல்லும் இலக்குடன் மருத்துவமனையின் இரண்டாம் வருட செயல்பாடுகளுக்கு எங்கள் வரலாற்றைப் பகிர்ந்து கொண்டிருக்கிறோம்.
  - ➢ CAC உறுப்பினர்கள் மருத்துவமனையின் விளம்பரப் பிரச்சாரத்தை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தனர், அதில் வானொலி, அச்சிட்ட பிரசுரங்கள் மற்றும் டிவி நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெற்றிருந்தன *(படங்கள் 1 மற்றும் 2)*.
- நம்முடைய தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் நிறுவனத்தின் தர மேம்பாட்டுத் திட்ட வடிவமைப்பில் உதவ மருத்துவமனையுடன் இணைந்து செயல்பட்டனர் *(படம் 3)*.
  - ➢ சுமார் 8 வயதுடைய குழந்தைகள், பாதுகாப்பான, உயர் தர உடல்நல கவனிப்பு எவ்வாறு உங்களை உணரச் செய்யும் என்பது குறித்து பேசும் நேர்காணலில் பங்கேற்று, குழந்தைகளுக்கான இந்த ஒரு பக்க கையேட்டை உருவாக்க உதவினர்.
  - ➢ அறங்காவலர் வாரியத்தின் தரக் குழுவிடமும் CAC உறுப்பினர்கள் இதைச் சமர்ப்பித்தனர்.

## அடுத்து என்ன

- 2018-2019 ஆம் ஆண்டில், Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் முதலாவது குழந்தைகளுக்கு உகந்த சிறப்புத் திட்டத்தை வெளியிட நாங்கள் உதவி செய்வோம்.
  - ➢ மருத்துவமனையின் குழந்தைகளுக்கு உகந்த பதிப்பாகிய **எல்லைகள் கிடையாது** என்ற திட்டம், எதிர்வரும் ஆண்டுகளில் நாம் எங்கு இருக்கிறோம் என்பதை இளம் வாடிக்கையாளர்கள் புரிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சிறப்புத் திட்ட செயல்முறையில் நாங்கள் சேகரித்த கருத்துரைகள் இறுதித் திட்டத்தில் இணைக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.
- Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் ஒரு மெய்நிகர் சுற்றுலாவை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. அது எங்களால் வழிநடத்தப்பட்டு, முதல் முறையாக Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வுக்கு வரும்போது குழந்தைகள் என்ன எதிர்பார்க்க முடியும் என அவர்கள் தெரிந்துகொள்ள உதவுவதாக இருக்கும்.
- Bloorview Research Institute (ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவனம்) வுடன் மற்றொரு வீடியோ கேம் சோதனை நிகழ்ச்சியிலும் நாங்கள் தொடர்ந்து ஈடுபட்டிருப்போம்.

**மேலும் தெரிந்துகொள்ள, CAC ஒருங்கிணைப்பாளர் Daniel Scott (டேனியல் ஸ்காட்) -வுடன் dascott@hollandbloorview.ca முகவரியில் தொடர்புகொள்ளவும்.**



# Youth Advisory Council (இளைஞர் ஆலோசனை மன்றம்)

## நாங்கள் யார்

Youth Advisory Council (இளைஞர் ஆலோசனை மன்றம்) (YAC) என்பது Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் இளைஞர் ஈடுபாட்டு திட்டத்தின் (YES) ஒரு பகுதி ஆகும். YES இன் ஒரு பகுதியாக, இளம் தலைவர்கள் (14 முதல் 29 வயது வரையுள்ள, தற்போதைய மற்றும் முன்னாள் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வாடிக்கையாளர்கள்) குடும்பங்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவமனைத் தலைவர்கள் ஆகியோருடன் இணைந்து மருத்துவமனையின் இலக்குகளை நிறைவேற்றப் பணிபுரிவார்கள். இந்த இலக்குகளில் உள்ளடங்குவன: திட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்குதல், திட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல், மருத்துவமனைச் சேவைகள் எப்படி வழங்கப்படுகின்றன என்பதை மதிப்பிடுதல், மற்றும் கற்பித்தல் மற்றும் கற்றல் முன்முயற்சிகளை உருவாக்குவதற்கு கூட்டணி அமைத்தல்.

இளம் தலைவர்கள் YAC கூட்டங்கள், குழுச் செயல்திட்டங்கள் மற்றும் இதர மருத்துவமனை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் வாயிலாக தலைமைப் பொறுப்புகள் மற்றும் ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளும் அனுபவ வாய்ப்புகளைப் பெறுகிறார்கள்.

2017-2018 இல், 32 YAC உறுப்பினர்கள் இருந்தனர்.


1


2


3

## நாங்கள் எப்படி ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினோம்

- தரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மூலம் மருத்துவமனையின் அங்கீகாரக் மதிப்பிடலில் ஆதரவு வழங்கல்:
    - ➢ பணியிட மதிப்பீட்டின் போது வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கு அங்கீகாரம் பற்றிய தகவல்களை வழங்க அங்கீகார வழிகாட்டிகளாகச் செயல்பட்டனர் *(படம் 1)*.
    - ➢ Accreditation Canada (அக்ரெடிடேஷன் கனடா) மதிப்பீட்டாளர்கள் கூட்டங்களில் பங்கேற்பு.
- எல்லைகள் கிடையாது நிதிய குழந்தைகள் மற்றும் இளைஞர் உள்நோயாளி பதின்பருவத்தினர் லவுஞ்ச் மறுவடிவமைப்பு வெற்றிகரமாக முடிக்கப்பட்டது, இதில் உள்ளடங்குவன:
    - ➢ ஒரு புதிய பசுமை காட்சியளிப்பு சுவர்
    - ➢ புதிய டிவி-க்கள் மற்றும் வீடியோ கேம் நிலையங்கள்
    - ➢ புதிய நாற்காலிகள்
- BRITE உறுப்பினர்களுக்கான இரண்டு கல்வி அமர்வுகளில் Bloorview Research Institute Trainee Executive (BRITE) உடன் இணைந்து பணிபுரிந்தனர்:
    - ➢ 'இளம் தலைவர்களுடன் இணைந்து வேலை செய்வது எப்படி'
    - ➢ 'இளம் பங்கேற்பாளர்களுக்கு அர்த்தமுள்ள நன்றி தெரிவிக்கும் கடிதங்களுக்கான ஆராய்ச்சிச் செயல்திட்டம் உருவாக்குதல்'
- எங்களுடைய தேவைகளைப் பிரதிபலிக்கும் நிறுவனத்தின் தர மேம்பாட்டுத் திட்டத்தை வடிவமைப்பதில் மருத்துவமனைக்கு உதவிபுரிதல்.
- நான்கு ஆராய்ச்சி நிறுவனத் திட்டங்கள் மற்றும் முயற்சிகளுக்கு கருத்துரை வழங்கு உதவுதல்.
- புதிய தொடர்புகொள்வதற்கான BRI அனுமதிக் களத்துக்கு 'connect2research' ('கனெக்ட்2ரிஸர்ச்') என்ற பெயர் பரிந்துரைக்கப்பட்டது ('connect2research' (கனெக்ட்2ரிசர்ச்) பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள RFEC பிரிவைப் பார்க்கவும்).
- '18 | பதினெட்டு: ஒரு கூட்டு முயற்சி கலைத் திட்டம்' இயலாமையுள்ள இளவல்களின் வயதுவந்தவர்களான வளர்ச்சியில் ஏற்படும் உன்னத அனுபவங்களை பதிவு செய்யும் துடிப்புமிக்க மற்றும் சக்திவாய்ந்த கலைக் கண்காட்சி ஒன்றை உருவாக்க Koffler Centre of the Arts (கோஃப்லர் சென்டர் ஆஃப் தி ஆர்ட்ஸ்) அமைப்புடன் இணைந்து ஆற்றிய பணி *(படம் 2)*.
- மூளைக் காயம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவருக்கு எப்படி இருக்கும் என்பதைக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு மூளைக் காயத்துக்கான முகமூடி தயாரிக்கும் திட்டத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆதரவளிக்கின்றனர் *(படம் 3)*.

## அடுத்து என்ன

- மருத்துவமனையின் முன்னுரிமைகள் மற்றும் முயற்சிகள் குறித்த கண்ணோட்டத்தில் தொடர் கவனிப்பு.
- மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவன ஊழியர்களுக்கு, இளைஞர்களை அவர்களுடைய செயல்திட்டங்களில் எப்படி சிறப்பாக ஈடுபடுத்துவது என்பதைப் பற்றி கல்வியறிவு வாய்ப்புகளை அளித்தல்
- இளைஞர்கள் ஈடுபாட்டுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வெளி ஆதரவாளர்களுடன் தொடர்ந்து இணைந்து பணிபுரிதல்.

**கூடுதல் விவரங்களுக்கு, Dolly Menna-Dack (டோலி மென்னா-டாக்), மருத்துவ உயிரிநெறிமுறையாளர் மற்றும் YES தலைவரை dmennadack@hollandbloorview.ca முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்.**

# Family Advisory Committee (குடும்ப ஆலோசனைக்குழு)

## நாங்கள் யார்

Holland Bloorview Kids Rehabilitation Hospital (ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை) மேற்கொள்ளும் அனைத்துச் செயல்பாடுகளின் மையமாக வாடிக்கையாளர் மற்றும் குடும்பத்தை மையப்படுத்தும் கவனிப்பு இருப்பதை உறுதிசெய்ய Family Advisory Committee (குடும்ப ஆலோசனைக் குழு) (FAC) உதவும். FAC உறுப்பினர்கள் முக்கிய மருத்துவமனைத் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் குறித்து தங்களுடைய வல்லமை மற்றும் வழிகாட்டல் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்கள் கூடவே, மருத்துவமனையிலும் பரந்த சமுதாயத்திலும் மேம்பட்ட கிளையண்ட் மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய கவனிப்புக்கு உதவக்கூடிய வருடாந்திர இலக்குகளை தங்களுக்கு வகுத்துக் கொள்கிறார்கள்.

2017-2018 இல் FAC 40+ உறுப்பினர்கள் (30+ குடும்பத் தலைவர்கள், 2 இளைஞர் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், 6 முதுநிலை மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், 1-2 அறக்கட்டளை வாரிய பிரதிநிதிகள் மற்றும் ஒவ்வொரு கூட்டத்திலும் 2-3 திட்டங்கள் மற்றும் சேவைகள் மேலாளர்கள்).

## நாங்கள் எப்படி ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினோம்

- கீழேயுள்ளவையும் உள்ளிட்ட 11 முக்கிய செயல்திட்டங்கள் குறித்த கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன:
  - ➢ மருத்துவமனையின் digital health strategy (டிஜிட்டல் ஹெல்த் செயல்பாடு)
  - ➢ Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ)வின் பண்புகள்
  - ➢ **Dear Everybody (அன்பிற்குரிய அனைவருக்கும்)** என்ற இயலாமை ஒழிப்புப் பிரச்சாரம்
  - ➢ Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் மனநலத் திட்டம்
  - ➢ மருத்துவமனையின் நிலைமாற்றத் திட்டம்
  - ➢ உள்நோயாளி தகவல் வளைபலகைகள்
  - ➢ **Capes for Kids (கேப்ஸ் ஃபார் கிட்ஸ்)** நிதி திரட்டும் பிரச்சாரம்




1



2



3

- எங்களுடைய கவனித்துக் கொள்பவர்களுக்குக் கவனிப்பு திட்டம் வாயிலாக கவனித்துக் கொள்பவர்களுக்கு தொடர் கவனிப்பு அளிக்கப்படுகிறது, இவையும் அதில் அடங்கும்:
  - ➢ Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் 2018 பொழுதுபோக்கு, ஓய்வு மற்றும் வாழ்க்கைத் திறன்களுக்கான கண்காட்சியில் ஒரு தகவல் சாவடி ஏற்படுத்துதல் *(படம் 1).*
  - ➢ 30 நபர்கள் கலந்துகொண்ட ஒரு வெளிநோயாளி காஃபி உரையாடல் *(படம் 2).*
  - ➢ சனிக்கிழமை இரவு களேிக்கை திட்டத்துக்கு வழிகாட்டியாக மருத்துவமனை அணிகளுடன் கூட்டு முயற்சி – 10 பெற்றோர்கள் இன்றியமையாத இடைவேளை தேவையை அனுபவித்தார்கள், அதேநேரம் ஓய்வு நிகழ்ச்சியில் அவர்களுடைய குழந்தைகளும் மற்றும் உடன்பிறப்புகளும் இலவசமாகக் கலந்துகொண்டனர் *(படம் 3).*
  - ➢ கவனித்துக் கொள்பவர்கள் தேவைகள் குறித்தும், Holland Bloorview' (ஹாலந்து ப்ளூர்வியூ) எப்படி பிரதிச்செயலாற்றுகிறது என்பதைப் பற்றியும் Holland Bloorview' (ஹாலந்து ப்ளூர்வியூ)வின் அறங்காவல வாரியத்துக்கு பயிற்சி
  - ➢ ஒரு புத்தெழுச்சிப் பயிலரங்கு நடத்தப்பட்டு, மனநிம்மதி, யோகா மற்றும் உணவுமுறைக் கல்வி விவரங்கள் அளிக்கப்பட்டன
- Holland Bloorview' (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் குடும்பத் தலைமை பதவித் திட்டத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் அடையாளம்:
  - ➢ மேம்பாட்டுக்கான பகுதிகளைக் கண்டறிவதற்கு ஒரு இலக்கிய மீளாய்வு முடித்தது.
  - ➢ குடும்ப ஈடுபாடு பற்றி வாடிக்கையாளர் மற்றும் குடும்ப ஒருங்கிணைப்பு கவனிப்பு அணிக்கு பரிந்துரைகள் செய்யப்பட்டன.
- குழந்தை கவனிப்பாளரின் முக்கிய கருத்துரையை மந்திரியின் நோயாளி மற்றும் குடும்ப ஆலோசனை குழுவிற்கு அனுப்பப்பட்டது, இக் குழு சுகாதாரம் மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சகத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கும்.
- குடும்பங்களும் மருத்துவர்களும் இடைவேளை எடுத்துக்கொண்டு பரஸ்பரம் உரையாட வாய்ப்பு அளிக்கும் வகையில் உள்நோயாளி காபி இரவுகள் நிகழ்ச்சி இரண்டு நடத்தப்பட்டது.
- இரண்டு கிளினிக்குகளில் வெளிநோயாளி வரவேற்பு ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## அடுத்து என்ன

- மருத்துவமனை பணியாளர்களுடன் இணைந்து தொழில்நுட்பம் சார்ந்த முன்முயற்சி வாய்ப்புகளை ஆராய்தல்
- குடும்பத் தலைமை பதவித் திட்டத்தை வளர்த்தலும் புதுப்பித்தலும்
- உள்நோயாளிகளின் குடும்பங்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்தல்
- தற்போதைய உள்நோயாளிக்கான தூங்கும் படுக்கைகளை உள்நோயாளி பிரிவுகளாக மாற்ற பணியாளர்களுக்கு உதவுதல்

**கூடுதல் தகவல்களுக்கு, கிளையண்ட் மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய கவனிப்பு மற்றும் கூட்டாண்மைகள் மேலாளராகிய Amir Karmali (அமிர் கர்மாலி) -ஐ akarmali@hollandbloorview.ca முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்.**



# Bloorview Research Institute Family Engagement Committee (ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவன குடும்ப ஈடுபாட்டுக் குழு) (RFEC)

## நாங்கள் யார்

Bloorview Research Institute Family Engagement Committee (ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவன குடும்ப ஈடுபாட்டுக் குழு) (RFEC) ஆராய்ச்சியின் எல்லா அம்சங்களிலும் குடும்பங்களை ஈடுபடுத்துவதற்கு Bloorview Research Institute (ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவனம்) -வுடன் (BRI) இணைந்து செயல்படுகிறது. Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ)-விலும் அப்பாலும் குழந்தைகள், இளையோர் மற்றும் குடும்பங்களின் வாழ்க்கையில் ஆராய்ச்சி மறுமலர்ச்சி ஏற்படுத்துவதை வெளிப்படுத்தி ஆராய்ச்சி மற்றும் மாற்றங்கள் ஏற்படுத்தும் ஆராய்ச்சி முடிவுகளில் குடும்பங்கள் ஈடுபடுவதை RFEC ஊக்குவித்து அதற்குப் பரிந்துரைக்கிறது.

2017-2018 இல், RFEC -யில் இருந்த 24 உறுப்பினர்களில் 12 நபர்கள் குடும்ப தலைவர்கள், ஆராய்ச்சியின் உப தலைவர் மற்றும் இயக்குனர், பிஆர்ஐ குழு உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர் மற்றும் குடும்பம் ஒருங்கிணைந்த கவனிப்புக்குழு உறுப்பினர்கள் ஆவார்கள்.



1




2

connect2research

3

## நாங்கள் எப்படி ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினோம்

- ஆய்வு விவரங்களை வாடிக்கையாளர்களும் குடும்பங்களும் புரிந்துகொள்ளும் தகவல்களாக மாற்றிக்கொடுக்கும் ஒரு நடைமுறைக்கு தேவை உள்ளது என்பதை RFEC கண்டுகொண்டது. ஒரு எளிமையான சுருக்கத் தொகுப்பை உருவாக்குவதற்கும், தடைகளைத் தகர்த்து எல்லாக் குடும்பங்களும் தங்களுடைய வாழ்க்கையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்குரிய திறனைக் கொண்டுள்ள ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளுக்கான அணுகலைப் பெறுவதை உறுதி செய்வதற்கும் எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இன்று வரை RFEC:
  - ➢ BRI யிடமிருந்து ஆராய்ச்சி வெளியீடுகளைத் தேர்ந்தெடுக்கும் மதிப்பீட்டு வரன்முறைகளை உருவாக்கியுள்ளதுடன் இந்த வரன்முறைகளைப் பயன்படுத்தி முதல் 12 வெளியீடுகளைத் தேர்ந்தெடுத்துள்ளது.
  - ➢ கிளையண்ட்கள் மற்றும் குடும்பங்கள், தகவல் மொழிபெயர்ப்பு வல்லுநர் மற்றும் அறிவியல் அறிஞர்கள் ஆகியோரின் கருத்துக்கள் மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டு ஆராய்ச்சியின் சுருக்கத் தொகுப்பை இணைந்து உருவாக்கியுள்ளது. *(படம் 1).*

- BRI யிடமிருந்து பறெ்ப்பட்ட வளெியீடுகளை ஆராய்ச்சி சயெ்வதற்கும் பல்வறேு ஆராய்ச்சி முறைகள் குறித்து பயிற்சியளிப்பதற்கும் குடும்பத் தலைவர்களை இதில் இணைத்துக்கொள்வதற்கும், குடும்பத் தலைவர் மற்றும் BRI அறிவியல் அறிஞர் ஆகியோரின் உதவியுடன் RFEC உறுப்பினர்களுக்கு ஆராய்ச்சி சஞ்சிகை கிளப் ஒன்றை நிறுவியுள்ளது.
- RFEC யின் இணைத் தலைவர் Sharon Gabison (ஷரோன் காபிசன்), ஆராய்ச்சி பயிற்சிச் சமுதாயத்தில் Canadian Academic Hospitals of Ontario (கனடிய ஒன்டாரியோ கல்வி மருத்துவமனைகள்) (CAHO) நோயாளி ஈடுபாட்டில் பங்கறே்க அழைக்கப்பட்டார்:
  - ➢ ஆராய்ச்சிக் கட்டமைப்பு மற்றும் குழு அமைப்பில் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் குடும்ப ஈடுபாட்டை Gabison (காபிசன்) சமர்ப்பித்தார். மலேும், சிறந்த நடைமுறைகள், முக்கிய வெற்றிகள் மற்றும் சவால்கள் குறித்த விவரங்களைப் பகிர்ந்துகொண்டார்.
- RFEC யின் உறுப்பினர்கள் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) வின் 12 வது வருடாந்திர ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்:
  - ➢ முதலாவது குடும்பத் தலைவராக Susan Cosgrove (சூசன் காஸ்குரோவ்) அவர் பங்கறே்ற ஓர் ஆய்விலிருந்து ஆராய்ச்சி முடிவுகளை விளங்கினார்: 'Autism spectrum (ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம்) கோளாறுள்ள குழந்தைகளுடனும் அவர்களுடைய குடும்பங்களுடனும் உடல் பருமன் மற்றும் எடை தொடர்பான விசயங்களைப் பற்றி நாம் எப்படிப் பசே வண்ேடும்?' *(படம் 2).*
  - ➢ ஆராய்ச்சித் துணைத் தலைவர் மற்றும் இயக்குநர், Dr. Tom Chau, (டாக்டர். டாம் சாவ்) உடன் இணைந்து Manuela Comito (மானுவலா கோமிடோ) இந்த நிகழ்ச்சியை நடத்தினார்.



- Permission-to-contact (பர்மிஷன்-டு-காண்டாக்ட்) புரொக்ராம், connect2research (கனெக்ட்2ரிசர்ச்) திட்டத்தை உருவாக்கி சயெல்படுத்த BRI உடன் இணைந்து சயெலாற்றியது. புதுமையான மற்றும் வாழ்க்கையை மாற்றியமைக்கும் ஹாலந்து ப்ளூர்வியூவில் நடக்கும் ஆய்வு குறித்து தரெிந்துகொள்ள இப் புரொக்ராம் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் வாய்ப்பு பற்றெுக்கொடுக்கும் *(படம் 3).*
- BRI வளர்ச்சி திட்டத்திற்கு விவரங்களும் வழிகாட்டுதலும் வழங்கப்பட்டன.

## அடுத்து என்ன

- ஆராய்ச்சியில் குடும்ப ஈடுபாட்டின் மதிப்பை வரையறுப்பதற்கும், மமேபாடுகளைச் சயெ்வதற்கும் ஆராய்ச்சிக் கட்டமைப்பிலும் அமைப்பிலும் குடும்ப ஈடுபாட்டின் மதிப்பை முழுமை சயெ்தல்.
- ஆராய்ச்சிக்காக முழுமையாக அணுகக்கூடிய, குழந்தைகளுக்கு உகந்த பணியிட MRI வசதியைத் திட்டமிட்டு உருவாக்குவதில் BRI உடன் கூட்டுச் சரே்ந்து ஆலோசனை வழங்குதல்.
- ஆராய்ச்சிக்கான முன்னுரிமைகளைக் கண்டறிவதில் வாடிக்கையாளர்களையும் குடும்பங்களையும் ஈடுபடுத்தும் வாய்ப்புகளையும் சிறந்த நடைமுறைகளையும் ஆய்வு சயெ்தல்.
- சுருக்கத் தொகுப்பு முயற்சியைத் தொடர்ந்து முன்னடெுத்துச் சலெ்வதையும், முதல் 12 ஆராய்ச்சி சுருக்கத் தொகுப்புகளை உள் நிறுவனத்திலும், வளெியிடங்களிலும் தொடர்ந்து ஆதரவு அளித்தல்.

**கூடுதல் தகவல்களுக்கு, family partnerships specialist (குடும்ப கூட்டாண்மை வல்லுநர்) Beth Dangerfield (பெத் டனே்ஜர்ஃபீல்ட்) -ஐ familypartner@hollandbloorview.ca முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்.**

# Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) பற்றி Kids Rehabilitation Hospital (குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை)

Holland Bloorview Kids Rehabilitation Hospital (ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை) உடல் ஊனம், மருத்துவ சிக்கல், நோய் மற்றும் காயம் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களை ஆதரிப்பதன் மூலம் அவர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கிறது. முன்னணி 40 கனடிய ஆய்வு மருத்துவமனைகளில் ஒன்றாகவும், University of Toronto (டொரன்டோ பல்கலைக்கழகம்)-வுடன் முழுமையாக இணைந்துள்ளதும் ஆன Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ), வருடந்தோறும் 7,500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சேவை அளித்துக் கொண்டிருக்கிறது. உள்நோயாளி மற்றும் வெளிநோயாளிச் சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கும் Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ), வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்களுடன் கூட்டு சேர்ந்து ஒப்பில்லாத கவனிப்பு அளிக்கும் நிபுணத்துவத்திற்கு நற்பெயர் பெற்றுள்ளது, Accreditation Canada (அக்ரடிடேஷன் கனடா) நடத்திய தர மதிப்பீட்டு கருத்தாய்வுகளில் அடுத்தடுத்த இரண்டு முறை 100 சதவீதம் பெற்றிருக்கும் ஒரே நிறுவனமாகவும் இது திகழ்கிறது. Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ), Kids Health Alliance (கிட்ஸ் ஹெல்த் அல்லையன்ஸ்) அமைப்பின் நிறுவுனர் உறுப்பினர்களின் ஒன்று; இந்த அமைப்பு குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் அவர் தம் குடும்பங்களை மையப்படுத்தி ஓர் உயர்தர நிலையான மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை உடல்நல கவனிப்பை வழங்க ஒத்த கருத்துள்ள வலைப்பின்னல் பங்குதாரர்களால் அமைக்கப்பட்டுள்ளது. கூடுதல் தகவல்களுக்கு அல்லது நன்கொடை வழங்க, தயவுசெய்து **hollandbloorview.ca** இணையதளப் பக்கத்தைப் பாருங்கள் அல்லது Twitter (ட்விட்டர்), Facebook (ஃபேஸ்புக்), Instagram (இன்ஸ்டாகிராம்), LinkedIn (லிங்க்டுஇன்) மற்றும் தாய் வலைப்பதிவாகிய BLOOM (ப்ளூம்)ஆகியவற்றுடன் இணைந்திருங்கள்.




**Holland Bloorview**
Kids Rehabilitation Hospital

150 Kilgour Road, Toronto, ON M4G 1R8
T: 416-425-6220 Toll-Free: 800-363-2440
F: 416-425-6591 **hollandbloorview.ca**
University of Toronto (டொரன்டோ பல்கலைக்கழகம்)-வுடன் முழுமையாக இணைக்கப்பட்ட ஒரு கல்வி மருத்துவமனை

[1568.18]